முதன்மை சார்பு நீதிமன்றம், விழுப்புரம்
OS. No.556/2021

Witness-DW-1

பெயர் / கோபாலகிருஷ்ணன்

**த.பெ - ராமநாதன்**

**இன்று** (03.11.2025) **சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.**

சத்தியமாகச் சொல்கிறேன்

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 4ம் வகுப்பு வரை படித்துள்ளேன், தமிழ் எழுதபடிக்கத் தெரியுமா என்றால் தெரியாது, நான் தாக்கல் செய்துள்ள பிரமாணப் பத்திரிக்கையில் என்ன விவரங்கள் சொல்லப்பட்டுள்ளது என்று தெரியுமா என்றால் தெரியும், வாதிகள் எத்தனை அயிட்ட சொத்துக்கு வழக்கு போட்டுள்ளார்கள் என்றால் எத்தனை அயிட்டம் என்று தெரியாது ஆனால் வீட்டுக்கும் நிலத்திற்கும் போட்டுள்ளார்கள், என்னென்ன சர்வே எண்ணுக்கு வழக்கு போட்டுள்ளார்கள் என்று தெரியுமா என்றால் சர்வே எண் பார்த்தால் தான் தெரியும், ராமநாதன் எனது தந்தை என்றால் சரிதான் எனது தந்தை ராமநாதனின் தந்தை பெயர் மொட்டையா கவுண்டர் என்றால் சரிதான் ஒன்னாம் பிரதிவாதி மொட்டைய கவுண்டருக்கு பிறக்கவில்லை என்று எனது பிரமாண பத்திரிகையில் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான் அதற்காக ஆவணங்களை ஏதாவது தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை 14,12,1953 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட போக்கியப் பத்திரம் வா,த,சா,ஆ 35 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது அதில் பெருமாள் கவுண்டர் மனைவி கருப்பாயி (எ) முத்தம்மாள் என்பவருக்கு மொட்டைய கவுண்டரும் மற்றும் மைனர்களாக இருந்த ராமநாதன் லட்சுமணன் (1ம் வாதி) ஆகியோர்கள் சார்பாகவும் கார்டியன் தகப்பன் முறையில் விக்கிரவாண்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்,234.1954 பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அந்த ஆவணம் பற்றி

எனக்கு எதுவும் தெரியாது, வா,த,சா,ஆ 35 படி எனது தந்தையாரும் 1ம் வாதியும் மொட்டைய கவுண்டரின் மகன்கள் என்று தெளிவாகியுள்ளது நான் தான் வேண்டுமென்றே மறுக்கிறேன் என்றால் சரியல்ல, 2 ம் வாதி இறந்துபோன பர்க்குணன் என்பவரின் மனைவிஇ 3 வாதி அவர்களுடைய மகன் என்றால் சரிதான், பர்க்குணன் என்பவரும் மொட்டை கவுண்டரின் மகன்களில் ஒருவர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது, 3,7,1954 தேதியிட்ட தானசெட்டில்மென்ட் பத்திரம் வா,தசா,ஆ 36 ல் துரைசாமி கவுண்டர் மற்றும் மொட்டைய கவுண்டர் ஆகியோர்கள் சேர்ந்து பர்க்குணன் என்பவரின் தாயார் முத்தம்மாள் என்பவரை திருமணம் செய்வதற்காக முன் கூட்டியே திருமணத்திற்கு முன்பு அந்த தானசெட்டில்மென்ட் விக்கிரவாண்டி சார்பதிவாளர் அலுவலத்தில் ஆவண எண்,1082.1954 ஆக பதிவு செய்யப்பட்டது என்றால் அந்த ஆவணங்கள் பற்றி எனக்கு தெரியாது, மொட்டைய கவுண்டர் முத்தம்மாள் என்பவரை திருமணம் செய்த வகையில் அவர்களுக்கு பிறந்தவர் தான் பர்க்குணன் அவர் இறந்துவிட்டார் அவருடைய மனைவி மகன் என்ற வகையில் 2 மற்றும் 3 வாதிகள் அவரது வாரிசுகள் என்றால் சரியல்ல, வழக்கில் உள்ள சொத்துக்கள் பொதுக்குடும்பச் சொத்துக்கள் அதனால் தான் வாதிகள் அதில் வழக்கிட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல, நான் பி,த,சா,ஆ 2 ன் அசல் பத்திரத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், ஏன் அசல் தானபத்திரத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் இதற்கு முன்பாக ரங்கநாத கவுண்டர் தாக்கல் செய்த வழக்கில் எனது தாயார் இறந்துபோன 1ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ளதால் நான் சான்றிட்ட நகலை தாக்கல் செய்துள்ளேன், அந்த ரங்கநாதன் என்பவரும் மொட்டைய கவுண்டரின் மகன் என்றால் அவரும் தன்னை மொட்டை கவுண்டரின் மகன் என்று தான் வழக்கு போட்டார், அந்த வழக்கின் தீர்ப்பு என்ன ஆனது என்றால் வழக்கில் சமாதானம் ஏற்பட்டுவிட்டது அந்த வழக்கில் அந்த பத்திரத்தைப் பற்றி எதுவும் சொல்லவில்லை, ரங்கநாதன் மொட்டைய கவுண்டர் மகன் என்று தீர்மானித்து அவருக்கும் பாகம் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, ரங்கநாதன் தாக்கல் செய்துள்ள வழக்கின் எண் அது தீர்ப்பான தேதி ஏதாவது தெரியுமா என்றால் தெரியாது, வாதிகள் தரப்பில் 3 நீதிமன்ற தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணைகள்

வா,த,சா,ஆ 8 முதல் 11 வரை மற்றும் 39 தாக்கல் செய்துள்ளார்கள் அதனை நான் படித்து தெரிந்துகொண்டேனா என்றால் எனது வழக்கறிஞர் படித்து சொன்னார் நான் தெரிந்துகொண்டேன், என்ன தெரிந்துகொண்டேன் என்றால் சொத்தில் பாகம் கேட்டு அந்த வழக்கு போடப்பட்டுள்ளது, ரங்கநாத கவுண்டர் கடலூர் சார்வு நீதிமன்றத்தில் அ,வ,எண்,316.1970 என்ற வழக்கு தாக்கல் செய்திருந்தார் அந்த வழக்கில் மொட்டைய கவுண்டரை 1ம் பிரதிவாதியாகவும் எனது தந்தை ராமநாதனை 2ம் பிரதிவாதியாகவும் 1ம் வாதி லட்சுமணனை 3ம் பிரதிவாதியாகவும் இறந்துபோன பர்க்குணனை இளவர் 4ம் பிரதிவாதியாகவும் எனது தாயாரை 7ம் பிரதிவாதியாக வும் காட்டி அந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அநத் வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது, அ,வ,எண்,316.1970 என்ற வழக்கில் ரங்கநாதனுக்கு பாகம் கொடுத்து தீர்ப்பானது என்றால் அந்த வழக்கில் அந்த வழக்கு நடந்துகொண்டிருந்தபோதே சமாதானம் ஏற்பட்டுவிட்டது, அந்த வழக்கில் ரங்கநாத கவுண்டருக்கு பாகமும்இ மீதிமுள்ள பாகம் மொட்டைய கவுண்டர் எனது தந்தைஇ 1ம் வாதி லட்சுமணன் இறந்துபோன பர்க்குணன் ஆகியோர்களுக்கும் தீர்ப்பானது என்றால் சரியல்ல, ரங்கநாதனுக்கு தீர்ப்பாண சொத்தை தான் எனது தாயார் கிரையம் பெற்றுள்ளார் என்றால் அவ்வாறு தீர்ப்பாகவில்லை, அந்த சொத்துகளுக்கான கிரைய பத்திரத்தை தான் பிதசா,ஆ 3 மற்றும் 4 ஆக தாக்கல் செய்யப்பட்டுளள்து என்றால் கோர்ட்டில் தீர்ப்பாகவில்லை, பி,சா,ஆ 3 மற்றும் 4 ஆவணத்தை ரங்கநாதன் கிரையம் கொடுத்தபோது தீர்ப்பின் மூலம் வந்த சொத்து என்ற வாசகம் குறிப்பிடாமல் எழுதப்பட்டுளள்து என்றால் அவ்வாறு தீர்ப்பாகவில்லை, நீதிமன்ற தீர்ப்புகளின் படி வாதிகள் மொட்டைய கவுண்டரின் வாரிசுகள் என்றால் சரியல்ல, தீர்ப்பின் அடிப்படையில் தான் ரங்கநாதனுக்கு சொத்து வந்தததுஇ அதே தீர்ப்பில் தான் வாதிகளுக்கும் எனது தந்தைக்கும் பாக உரிமை உள்ளது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, அது எனது தாயாருக்கு சொந்தமானது, எனது தாயாருக்கு சுயமாக சம்பாதித்த சொத்து என்று சொல்லப்பட்டுள்ளது அதற்கு ஆவணம் ஏதாவது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் இல்லை, ரங்கநாத கவுண்டருக்கு பாகம் தீர்ப்பானது போக மீதமுள்ள பாகத்தில் மொட்டைய கவுண்டர் இ 1ம் வாதி

இ இறந்துபோன பர்க்குணன் மற்றும் எனது த ந்தைக்கு பாகம் இருந்தது ஆனால் மொத்த சொத்தையும் மொட்டைய கவுண்டரிடமிருந்து எனது தாயார் பெயரில் கிரையம் பெற்றது செல்லாது என்றால் சரியல்ல, எனது தந்தை ராமநாதன் உயிரோடு இருந்தபோதே அவரது தம்பியான 1ம் வாதி லட்சுமணன் பாகம் பிரித்து தர கேட்டும் எனது தந்தையால் வீண் காலதாமதம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல, வாதிகளுக்கு சொத்தில் உள்ள உரிமையை மறுத்து எனது தாயார் 1ம் பிரதிவாதிஇ 2 முதல் 5 பிரதிவாதி பெயரில் 14,9,2020 தேதியில் தனித்தனி தான செட்டில்மென்ட்டாக எழுதிகொடுத்துள்ளார் அது வாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல, வாதிகள் காவல் நிலைய்த்தில் நில அபகரிப்புக்காக புகார் கொடுத்தார்கள் அந்த விசாரணையில் நானும் ஆஜரானேன் சிவில் வழக்கு என்பதால் நீதிமன்றத்தை அனுக அறிவுறுத்தினார்கள் என்றால் சரிதான், மொட்டைய கவுண்டருக்கு எனது தந்தை எப்படி வாரிசோ அதுபோல 1ம் வாதியும்இ இறந்துபோன பர்க்குணனும் வாரிசுகள் அதனால் சொத்தில் வாதிகளுக்கு பாக உரிமை உள்ளது என்றால் சரியல்ல, வாதிகள் கோரியபடி தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல,

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.

Principal Subordinate Judge ,
Villupuram